[1993 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைர்வ அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தச் சூழ்நிலையிலும், தொழிலாளர் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தெளிவான கருத்தோடு மாநில தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி அதற்காக 50 கோடி ரூபாயை ஒதுக்கித்தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டு கோள் விடுத்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் வரும் ஆண்டிலாவது இதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்ககிரிக்கான தொழிலாளர் நீதிமன்றம் தற்போது சேலம் மாவட்டத்திற்கு புதிதாகத் துவங்கப்பட்டு சேலம் நகரத்திலே செயல்பட்டு வருகிறது. எனவே, சங்ககிரிக்காக தனியாக தொழிலாளர் நீதிமன்றம் துவக்கப்பட வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 555, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

555—

கிணத்துக்கடவு தென்னை நார் தொழிற்சாலை.

*10974—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதியில் தென்னை நார் தொழிற்சாலைகளிலிருந்து பெறும் கழிவான 'Coir Pith' சாலை ஓரங்களில் கொட்டி நெருப்பு வைக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அதை பயனுள்ள பொருளாக மாற்ற அரசு ஒரு தொழில் நுட்பத்தைக் கண்டறியுமா?

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென்னை நார் கழிவுத் தூள்களை (Coir Pi...) பயனுள்ள உரமாக மாற்றும் செய்முறை நுட்பத்தினை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து செயல் படுத்தி வருகிறது.

திரு. நா. சா. பழனிசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு தொகுதியிலே அதிகமான தென்னை மரங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்தத் தேங்காய்களை உரிக்கின்ற போது கிடைக்கும் மட்டைகளைப் பயன்படுத்தி தென்னை நார் தொழிற்சாலைகள் அங்கே ஏராளமாக உருவாகி இருக்கின்றன. தென்னையினுடைய எல்லாப் பொருள்களுமே ஏதாவது ஒரு வகையில் பயன் படும் பொருளாக இருக்கின்றபோது அந்தத் தென்னை நார் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படுகிற அந்த காயர் பித் என்று சொல்லப்படுகின்ற கழிவானது இன்றைக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படாமல் பல இலட்சம் டன்கள் அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றவேண்டிய அவசியம் இருக்கின்ற சூழ்நிலையில் அந்தத் தொழிற்சாலையை வைத்து இருப்பவர்கள் அதற்கென்று ஒரு பிரத்தியேகமான இடத்தை வைத்திருந்தாலும் கூட அதைப் பயன்படுத்தாமல் அவர்கள் டிராக்டர்களில் எடுத்துச் சென்று அருகே இருக்கின்ற நெடுஞ் சாலைகளில் ஓரங்களில் கொட்டிவிடுகிறார்கள். அப்படி கொட்டுவது மட்டுமல்லாமல் அதில் நெருப்பையும் வைத்து விடுகிறார்கள். அதனால், அந்த சுற்று வட்டாரப் பகுதியில் நெருப்பு அபாயம் ஏற்படுகிறது. பக்கத்திலே இருக்கின்ற சாலையோர மரங்கள் எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : மரங்கள் காய்ந்து விடுகின்ற அபாயம் இருந்துகொண்டிருக்கிறது. எனவே அவற்றை பயனுள்ள வழியிலே பயன்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்ததாகச் சொன்னார்கள். அதை விவசாயிகள் இன்று வரை சரி யாக உபயோகப்படுத்துவதில்லை. விவசாயிகள் அதை உபயோகப்படுத்தி அதை உரமாக மாற்றுவதற்கு வேண்டிய விரிவான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993-94ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களில் தென்னை உரி மட்டைகள், நார் கழிவுகள், கரும்புத் தோகை போன்ற பண்ணைக் கழிவுகளை இயற்கை உரமாக மாற்றிடத் தேவைப்படும் பூஞ்சாணம் மற்றும் தொழில் நுட்பங்களை சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக அவர்களுக்கு உதவித் தொகை ரூ. 100 மானியம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி, சுருக்கமாகக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக் கழகம் மூலமாக அதற்கான ஒரு பூஞ்சாணம் கண்டு பிடிக்கப்பட்டு அதை உரமாக மாற்றுவதற்கான திட்டம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைச் சொல்லுகின்றபோது சிறு, குறு விவசாயிகள் என்ற ஒரு வார்த்தையை குறுக்கே போடு கிறார்கள். இந்த தென்னை நார் கழிவை உரமாக மாற்றுவது சிறு, குறு விவசாயிகளினால் செய்யக்கூடிய சாத்தியமான வேலை இல்லை. மலை போல் குவிந்து இருக்கும் அவற்றை தொழு உரமாக, இயற்கை உரமாக மாற்றவேண்டுமென்றால், அதற்கான ஒரு பெரிய திட்டத்திலே எல்லா விவசாயிகளுக்கும் பயனளிக்கும் வகையில் இந்தப் பூஞ்சாணத்தை வினியோகிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும். அப்படி செய் தால் இன்றைக்கு ரசாயன உரத்தினுடைய விலை பன்மடங்கு உயர்ந்து இருக்கின்ற இந்த நேரத்தில் இந்த இயற்கை உரமானது பயன்படுத்தப்பட்டு, அந்த தென்னை நார் கழிவும் பயனுள்ள வகையில் பயன் படும். எனவே, எல்லா விவசாயிகளுக்கும், இதை இயற்கை உரமாக மாற்றுவதற்கு வேண்டிய தொழில் நுட்பத்தை அதற்கு வேண்டிய பூஞ்சாணத்தை மானிய விலை யில் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு, குறு விவசாயிகளுக்குத்தான் மானியமாக ரூபாய் 100 வழங்கப்

1993 ஏப்ரல் 30]

படும் என்பதைச் சொன்னேன். நம்மைப் போல பெரிய புண்ணைக்காரர்கள், நிலம் அதிகமாக வைத்து இருக்கக் கூடிய விவசாயிகள் எல்லாம் தென்னை நார் கழிவுகளை இயற்கை உரமாக மாற்றுவதற்கு அவர்கள் முன்வருவார்கள் என்று சொன்னால், வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்த 'பிளிலோட்டஸ் காளான் களை' இலவசமாக வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது. இதைப் பயன்படுத்தினால், அந்தத் தென்னை நார் கழிவில் இருக்கக்கூடிய அந்த நார்கள் மக்கி உரமாகின்றபோது தழைச் சத்து மற்றும் சாம்பல் சத்தினுடைய அளவுக்கு தொழு உரத்தைக் காட்டிலும் இரு மடங்காக உயருகிறது. எனவே, இதனை விவசாயி கள் பயன்படுத்த வேண்டும் என்பதால், அரசு விரைவாக இந்த ஆண்டு திட்டத்தைச் செயற்படுத்த இருக்கிறது என்பதை தங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு, பொள் ளாச்சி போன்ற பகுதிகளில் தென்னை மட்டையிலிருந்து நார் எடுக்கின்ற தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. அதிலிருந்து விழுகின்ற கழிவுப் பொருட்களை சாலை ஓரங்களில் போடுகின்ற காரணத்தால் அரசுக்கு வருவாய் வருகின்ற நல்ல, நல்ல புளிய மரங்கள் எல்லாம் பட்டுப் போகின்ற நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையைத் தடுத்து நிறுத்த அங்கே, கழிவுப் பொருட்களைக் கொட்டுகின்ற அந்த தொழில் அதிபர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிற்சாலைகளின் உரிமங்களை ரத்து செய்வார்களா? அப்படிச் செய்தால்தான் இப்படிப்பட்ட நிலையைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நிலை இருக்கின்ற காரணத் தால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலையின் இரு மருங்கிலும் இந்தத் தென்னை நார் கழிவுகளைக் கொட்டக் கூடிய அந்தத் தொழிற்சாலைகளை வைத்து இருக்கக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வேளாண் மைத் துறைக்கு வழிவகை இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் தொழில் துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டுத் துறை மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 556—திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

556—

திருவையாறு தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள்.

*11650—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியில் கட்டளைக் கால்வாய் மூலம் பாசன வசதி பெறாத செங்கிப்பட்டி, பாளையப்பட்டி பகுதிகளிலுள்ள ஏரிகளில் வறட்சி காலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குறைந்த வாடகைக்கு மோட்டார்கள் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே—

இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கட்டளை வாய்க்கால் பகுதியில் செங்கிப்பட்டி, பாளையப்பட்டி பகுதியிலுள்ள ஏரிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குறைந்த வாடகைக்கு மோட்டார்கள் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆயில் இன்ஜின் வாங்குவதாக இருந்தாலும் அல்லது மோட்டார் இஞ்சின் வாங்குவதாக இருந்தாலும் அவர்களுக்கு அந்த விலையில் 30 சதவிகித மானியத்தை வழங்குவதற்கு அரசிடத்தில் திட்டங்கள் இருக்கின்றன. அதேபோல், வடிமுனை குழாய்கள் மூலமாக அங்கே தண்ணீரை மேல் ஏற்றுவதற்கு வேண்டிய வசதிகளை அரசு மானியத்தில் செயற்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.